செ.வெ.எண்: 283 நாள்:29.04.2018

**திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் மாங்குடியில் சங்ககால புலவர் மாங்குடி மருதனார் நினைவு தூணிற்கு மலர்தூவி மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம். ராஜலெட்சமி அவர்கள் சிறப்பு செய்தார்கள்.**

***********

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் மாங்குடி பகுதியில் அமைந்துள்ள சங்க கால புலவர் மாங்குடி மருதனார் நினைவு தூணிற்கு இன்று 29.04.2018 மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. வி.எம். ராஜலெட்சுமி அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் மலர்தூவி சிறப்பு செய்தனர்.

பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது ..

பாவேந்தர் பாரதிதாசனின் 127-வது பிறந்த நாளினை கவிஞர்கள் தினமாக தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு சங்க கால புலவர்களின் நினைவு தூண்களில் மலர்தூவி மரியாதை செலுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க இன்று மாங்குடி பகுதியல் உள்ள சங்க கால புலவர்களில் தனக்கேன்று தனியிடத்தொடு சிறந்து வழங்கியவர் மாங்குடி மருதனார் இவர் இயற்றிய பாடல்கள் சங்க பாடல் தொகுப்பில் 13 பாடல்கள் உள்ளன. சங்க பாடல் தொகுப்பில் இவரது பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றினை, புறநானூறு, மதுரைகாஞ்சி இவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வளவு சிறப்புகளை பெற்ற மாங்குடி மருதனாருக்கு 1992ம் ஆண்டு அமைக்கப்பட்ட நினைவு தூண் சிறப்போடு திகழ்ந்து வருகிறது. மேலும் மாங்குடி மருதனார் அவர்களின் புகழ் மேல்மேலும் வளர்ந்து வருகிறது தழிழ்நாடு அரசு தமிழுக்கு சிறப்பு செய்யும் வகையில் தமிழ் அறிஞர்களுக்கு பல்வேறு விருதுகள் வழங்கி சிறப்பு செய்து வருகிறது. என மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் பேசினார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது.......

தமிழ் கவிஞர்கள் இனமாக கொண்டடப்படும் ஏப்ரல் 29வது நாளன்று சங்க கால புலவர்களின் நினைவு தூண்களுக்கு மாலை அணிவித்து மலர்தூவி சிறப்பு செய்யப்பட்டு தனி அரசாணை பிறப்பிக்கப்பட்டு அதனை தொடர்ந்து சிவகங்கை, காஞ்சிபுரம் , கரூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள சங்க கால புலவர்களின் நினைவு தூண்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்வதற்கு சிறப்பு நீதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சிறப்பு செய்யப்பட்டு வருகிறது அதன்படி இன்று நம் மாவட்டத்தில் மாங்குடியில் அமைந்துள்ள சங்க கால புலவர் மாங்குடி மருதனாருக்கு தமிழ் வளர்ச்சி துறையின் சார்பில் மலர்தூவி மரியாதை செலுத்தப்படுகிறது. கடந்த காலங்களை பற்றி நாம் தெரிந்து கொள்வதற்கு தமிழ் புலவர்கள் இயற்றிய பல பாடல்கள் மற்றும் கவிதைகள் நமக்கு நமது சந்ததியினருக்கும் உதவியாக உள்ளது. என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் பள்ளிகல்வி மற்றும் தழிழ் வளர்ச்சி துறை அமைச்சர் முனைவர் வைகை செல்வன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.வசந்தி முருகேசன், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.மனோகரன், காவல்துறை துணை ஆணையாளர் (சென்னை பரங்கிமலை) திரு.முத்துசாமி இ.கா.ப., அவர்கள், தமிழ் வளர்ச்சி துறை மண்டல துணை இயக்குநர் திரு.பசும்பொன் அவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர் திரு.ஆவின்ரமேஷ், ஆறுமுகம், பாஸ்கர் உட்பட முக்கிய பிரமுகர்கள,தமிழ் அறிஞர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி